Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 160

செவ்வாய்க்கிழமை
05 மே 2026

சித்திரை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## நாட்டின் பல பகுதிகளில் இடிமின்னல்

கொழும்பு, மே 5
நாட்டின் பல பகுதியில் இடி மின்னல் தாக்கங்கள் தீவிர மடைந்துள்ள நிலையில், அதனால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் மிக அவதானமாக இருக்குமாறு வளிமண்டல »11

# தமிழக முதல்வராக விஜய்!



### திராவிடக் கட்சிகளின் வரலாறு வீழ்ந்தது
### 30 வருடங்களின் பின் ஸ்டாலின் தோல்வி

சென்னை, மே 5
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் அபார வெற்றிபெற்றுள்ள நிலையில், அந்தக் கட்சி மிகவிரைவில் ஆட்சியமைக்கவுள்ளது. »11



## செம்மணி மனிதப்புதைகுழியில் மேலும் 4 என்புத்தொகுதிகள்!

யாழ்ப்பாணம், மே 5
அரியாலை செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து மேலும் நான்கு என்புத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு என்புத் தொகுதி குழந்தையுடையது எனக் கருதப்படுகின்றது.
செம்மணி மனிதப்புதை குழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் ஏழாம்நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற் »11

## தமிழக முதல்வராக விஜய் தாயகத்தில் கொண்டாட்டம்




யாழ்ப்பாணம், மே 5
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் அபார வெற்றியைப் பெற்றதைத் தொடர்ந்து, தமிழர் தாயகத்திலும் அவருடைய ரசிகர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.
தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் உள்ள விஜய் ரசிகர்கள், தமிழக வெற்றிக் கழகத்தின் கொடிகளைப் பறக்கவிட்டு, வெடி கொளுத்தியும், கேக் வெட்டியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். (அ-ம-26)

## சீமானின் கட்சி படுதோல்வி!



சென்னை, மே 5
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சீமான் தலைமையிலான 'நாம் தமிழர்' கட்சி ஒரு தொகுதியைக்கூட கைப்பற்றாமல் படுதோல்வி அடைந்துள்ளது.
இந்தத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியும் வலுவான போட்டியாளராக »11



## மரக்கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், மே 5
முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு முதிரைமரக் குற்றிகளைக் கடத்திச்சென்ற நபரொருவர் சாவகச்சேரி பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். »11

## மஹிந்தவை விசாரணைசெய்து பலம்காட்ட முயல்கிறது அரசு!

விரிவு பக்கம்:- 02

## சட்டவிரோத மீன்பிடி 77 மீனவர்கள் கைது

விரிவு பக்கம்:- 03

## கணவனைப் படுகொலைசெய்து மலக்குழிக்குள் போட்ட மனைவி!

### மன்னாரில் கொடூரம்

மன்னார், மே 5
கணவனைப் படுகொலை செய்து, அவருடைய சடலத்தை துண்டுதுண்டுகளாக வெட்டி மலக்குழிக்குள் போட்டு மூடிய குற்றச்சாட்டில், 29 வயதுடைய பெண்ணொருவரை மன்னார் பொலிஸார் கைது »11



முச்சந்தி முரளி

"இனிமேல் புருசன்மாரெல்லாம் கொஞ்சம் அவதானமா அடக்க ஒடுக்கமா மனுசி சொல்லே மந்திரமா இருந்தால் தான் உயிர் தப்பலாம் கண்டியளோ"

## குருநகரில் கொடூரம்
## மதுப்போத்தலால் தாக்கி இளைஞர் கோரக்கொலை

யாழ்ப்பாணம், மே 5
யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் மதுவிருந்தில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில், இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கொலை செய்யப்பட்டுள்ளார். »11

## பூநகரி பிரதேசசபைக்குச் சொந்தமான உழவியந்திரத்தில் மணல் கடத்தல்!

### கைப்பற்றியது விசேட அதிரடிப்படை

கிளிநொச்சி, மே 5
கிளிநொச்சி - ஜெயபுரம் பகுதியில், பூநகரி பிரதேச சபைக்குச் சொந்தமான உழவியந்திரம் மூலம் இடம்பெற்ற சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.
விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய »11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4421 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 09 23 48 61 |
| விசேட எழுத்து | F |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1488 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 13 29 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0447 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 4 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2527 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 19 22 70 79 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6179 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 8 1 8 8 9 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2209 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 11 13 52 79 |
| விசேட எழுத்து | Q |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 04.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0295 |
| வெற்றி இலக்கினம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 40 42 |

# இலங்கை-இந்தியா இடையே வலுவடையும் வர்த்தக உறவு

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு


கொழும்பு, மே.5

**இந்தியா-இலங்கை இடையிலான எரிசக்தி, பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகள் மேலும் வலுவடைந்து வருகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி, இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் பல்வேறு வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது. இந்த நல்லுறவு தொடரவேண்டும். இந்தியா இலங்கையை ஒரு பங்காளியாகக் கருதவேண்டும். எரிசக்தி, பாதுகாப்பு, டிஜிற்றல் முறைமையிலான கொடுப்பனவுகள், ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் பலப்படுத்தப்படவேண்டும்.

வெறுமனே உற்பத்தித் திறனில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், மின்னுற்பத்தி மற்றும் விநியோகம் போன்றவற்றின் செயற்றிறனிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றங்கள் உள்ளிட்ட பூகோள அரசியல் நிலைவரங்கள் இருநாடுகளையும் இத்தகைய ஒத்துழைப்புக்களை விரைவுபடுத்துவதற்குத் தூண்டும்-என்றார். (க-இ)



## மாலைதீவு - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, மே 5

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இரண்டு நாள்கள் உத்தியோகப் பூர்வப் பயணம் மேற்கொண்டு மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிசு நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தார்.

அவரை வரவேற்கும் உத்தியோக பூர்வ அரச விழா நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் 7 முக்கியமான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (எ-இ)

## மஹிந்தவை விசாரணைக்கு அழைத்து பலத்தைக் காட்ட முயல்கின்றார் அநுர

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு,மே 5

மஹிந்த ராஜபக்சவை விசாரணைக்கு அழைப்பதன் மூலம், தமது அரசியல் பலத்தைக் காட்ட முயற்சிக்கின்றார் ஜனாதிபதி . ஆனாலும் பொதுஜன பெரமுன இன்றும் பலமாகவே உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ள தாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் உத்தியோகபூர்வமாக எமக்குக் கடிதம் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

அரசாங்கத்துடன் தொடர்புடைய சமூக வலைத்தளங்கள் இதைப் பரப்பி வருவதால், கடிதம் வழியில் வந்து கொண்டிருக்கும் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அச்சுறுத்திப் பெறப்பட்ட ஒரு வாக்குமூலம் தொடர்பிலேயே, அவரிடம் விசாரணை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அவ்வாறு வாக்குமூலம் அளித்த நபரே, தான் அச்சுறுத்தப்பட்டதாக ஏற்கனவே சத்தியக்கடதாசி மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறான எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் சக்தி பொதுஜன பெரமுனவுக்கு உண்டு. நாம் எப்போதும் மக்களுடன் இணைந்தே எமது அரசியலை முன்னெடுப்போம். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது குறித்தோ, தொழிலாளர்களின் உரிமைகள் குறித்தோ பேசுவதை விடுத்து, எம்மை எவ்வாறு சிறையில் அடைக்கலாம் என்பது பற்றியே மே தினக் கூட்டங்களில் ஜனாதிபதி பேசியுள்ளார்.

நீதிமன்றக் கட்டமைப்பின் மீது எமக்கு இன்னும் நம்பிக்கையுள்ளது. ஜனாதிபதி மேடைகளில் இருந்து தீர்ப்பு வழங்கினாலும், நீதியரசர்கள் நடுநிலையாகச் செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம்-என்றார். (க-இ)



## தங்கம் விலையில் மாற்றம் இல்லை

கொழும்பு, மே 5

நேற்றுத் தங்கத்தின் விலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 392, 000 ரூபாவுக்கும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 360,600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 04.05.2026 | திங்கட்கிழமை | 0887 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 1 4 2 6 2 1 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.05.2026 | திங்கட்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3153 | M | 59 63 64 80 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.05.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 02 08 16 26 | 5314 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 04.05.2026 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0983 | 01 05 40 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.05.2026 | திங்கட்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 32 34 39 49 | 4865 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 04.05.2026 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 37 | 04 15 28 56 | 2329 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.05.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 31 37 70 73 | 2979 |

## அரசாங்கம் பலவீனமடைவதாலேயே சர்வதேசக் குற்றவாளிகள் ஊடுருவல்

### ராஜித குற்றச்சாட்டு

கொழும்பு, மே 5

அரசாங்கத்தின் பலவீனம் மற்றும் தன்னிச்சையான செயற்பாடுகளால் முழு அரச நிர்வாகக் கட்டமைப்பும் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் இந்தப் பலவீனத்தை சர்வதேசக் குற்றவாளிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளார். அவர் மே தினக் கூட்டத்தில் குறிப்பிட்ட விடயங்கள் கவனத்துக்குரியவை. வழக்கு விசாரணைகள் தொடர்பில் அவர் குறிப்பிட்ட விடயங்கள் முற்றிலும் தவறானவை. நாட்டில் நீதித்துறையை நிர்வாகத்துறை ஆக்கிரமித்துள்ளது. காட்டுச் சட்டமே செயற்படுத்தப்படுகின்றது. இந்த மாதம் முதல் சிறை செல்ல வேண்டியவர்கள் இவர்கள் தான் என்று ஜனாதிபதி பெயர்ப் பட்டியலை வாசிக்கின்றார். இவ்வாறான பின்னணியில் குறித்த வழக்கு விசாரணைகளில் நீதிபதிகளால் எவ்வாறு சுயாதீனமாகச் செயற்படமுடியும். திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையாகச் செயற்படவில்லை. அலட்சியமாகவுள்ளது-என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2.5 மில்லியன் டொலர் மாயம் கோபா ஊடாக விசாரணை!

## வலியுறுத்துகின்றது 'ப்ரீ லோயர்ஸ்' அமைப்பு

**கொழும்பு, மே 5**

**திறைசேரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மோசடி தொடர்பாக, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு ஊடாக விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்று 'ப்ரீ லோயர்ஸ்' அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. கோரிக்கை அடங்கிய கடிதம் அரசாங்கக் கணக்குகள் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹசீமிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே சபாநாயகரிடம் எழுத்துபூர்வமாக முறைப்பாடு அளிக்கப்பட்டபோதிலும், இதுவரை எவ்வித பதிலும் கிடைக்க வில்லை என அந்த அமைப்பின் உறுப்பினர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். நிதி அமைச்சின் செயலாளருக்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்க ஒரு மாத காலம் வழங்கப்பட்டுள்ளது. இது பிரச்சினையைத் திசைதிருப்பும் முயற்சியாகத் தெரிகின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். நாடாளுமன்றத்தின் ஊடாக முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாததால், கணக்காய்வாளர் நாயகத்தை மையப்படுத்தி கோபா குழுவின் ஊடாக பகிரங்க விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## போதைப்பொருள்களுடன் ஒரே நாளில் 899 பேர் கைது

கொழும்பு, மே 5

போதைப்பொருளைத் தடுக்கும் தேசிய வேலைத்திட்டத்தில், பொலிஸாரால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 899 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 335 கிராம் ஹெரோய்ன், 493 கிராம் ஐஸ், 65 கிலோ 240 கிராம் கஞ்சா, 11,275 கஞ்சா செடிகள், 190 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 16 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,289 போதைமாத்திரைகள், 222 கிராம் மதனமோதகம் மற்றும் 76 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் தடுப்புக் காவல் உத்தரவு பெற்ற 8 பேரும், சட்டவிரோதச் சொத்துகள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 22 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

## சட்டவிரோத மீன்பிடி 77 மீனவர்கள் கைது

கொழும்பு, மே 5

இலங்கைக் கடற்படை, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மீன்வளம், நீர்வளத் திணைக்களம் ஆகியவை இணைந்து முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையில், 77 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், வணிக வெடிபொருள்களுடன் கூடிய 17 டிங்கிகள் மற்றும் 6 டிராக்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. திருகோணமலை, கந்தளாய், வாழைச்சேனை, கல்லராவ, கிண்ணியா, துடுவ, காயங்கேணி, போல்ட் பொயின்ட், சாம்பூர், சிலாவத்தை, இறக்கக்கண்டி, முகத்துவாரம், பனிச்சங்கேணி, நந்திக்கடல் களப்பு, யாழ்ப்பாணம், வெற்றிலைக்கேணி, பருத்தித்துறை, மன்னார் சவாரிபுரம் ஆகிய கரையோரங்களையும், கடற்பரப்புகளையும் உள்ளடக்கியதாக கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (க-இ)



## 548 பேர் கைது

கொழும்பு, மே 5

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 548 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவர்களில் 147பேர்குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்றும், 380 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மதுபோதையில் வாகனம் செலுத்திய 135 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 83 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (கஇ)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் புலனாய்வுத் தகவல்கள் பகிர்வு

கொழும்பு,மே 5

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில், அரச புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளரால், பாதுகாப்புச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட புலனாய்வுத் தகவல்கள், சிவில் செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத்தால் பகிரப்பட்டுள்ளன. அரச புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளரால் அனுப்பப்பட்ட குறுஞ்செய்திகளில், சஹ்ரான் ஹாஸீம் மற்றும் அவரது சகாக்கள் இலங்கையில் தாக்குதலொன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்று வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பொன்றிடமிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் காத்தான்குடியில் வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பயன்படுத்தி, மேற்கொள்ளப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒத்திகை தொடர்பிலும், சஹ்ரான் குழுவின் தாக்குதல் 21.04.2019 அன்று அல்லது அதற்கு முன்னதாக எந்த நேரத்திலும் நடத்தப்படக்கூடும் எனவும், தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் இலக்குவைக்கப்படக் கூடும் எனவும் எச்சரிக்கை விடுத்து தகவல் அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வட்ஸ்அப் தொடர்பாடல் தகவல்களே தற்போது வெளியாகியுள்ளன. (க-இ)




## தமிழன் கனவு செய்த சாதனை!

எங்களில பிழையை வைச்சுக் கொண்டு அடுத்தவையில பழிபோடுறது எங்கட பிறவிக்குணம். 'இப்பவெல்லாம் ஆர் வாசிக்கினம்? எல்லாரும் போனோட தான். அதால இப்ப புத்தகங்களை வாசிக்கவும் ஆளில்லை, வாங்கவும் ஆளில்லை' எண்டு எல்லாரும் புலம்பிறதைப் பார்த்திருப்பம். ஆனால் இப்பவும் கனபேரிட்டை வாசிப்புப் பழக்கம் இருக்கத்தான் செய்யுது. ஆனால் அவை தங்களுக்கு எதில ஈஸியா வாசிக்க முடியுமோ அதில வாசிக்கினம். இப்ப பி.டி.எப். புத்தகங்கள் குவிஞ்சு போயிருக்கு. அதால அவை தங்களுக்கு எப்ப வாசிக்க நேரம் கிடைக்குதோ அப்பப்ப வாசிச்சுக் கொள்ளுவினம். அதால வாசிப்புப் பழக்கம் குறையேலை, வாசிக்கிற முறைதான் மாறியிருக்கெண்டது தான் உண்மை. அப்ப அவைக்கேத்தமாதிரி, இப்பத்தைச் சூழலுக்கு ஏத்தமாதிரி புத்தகங்களை எழுதினால் அதை எங்கட ஆக்கள் வாசிக்கத்தான் செய்வினம்.

அதைவிட இன்னொரு குறையும் எங்கட எழுத்தாளர்மாரிட்ட இருக்கு. அவை என்ன செய்வினம் எண்டால் ஒவ்வொரு வருசமும் நல்லூர்த்திருவிழா நடக்கிற மாதிரி இவையும் வருசத்துக்கொரு புத்தகம் அடிப்பினம். அப்பிடி தொடர்ச்சியா புத்தகம் அடிக்கேக்க அவையின்ர கற்பனையும் வறண்டு புத்தகங்கள் கடமைக்கு எழுதின மாதிரி, ஒரே மாதிரியா வரத்தொடங்கிடும். அதோட அதை வாங்கிற ஆக்களும் தொடர்ந்து புத்தகம் வாங்காமல் நழுவத் தொடங்கிடுவினம். இன்னும் சில எழுத்தாளர்மார் வருசத்துக்கு நாலைஞ்சு புத்தகம் விட்டு, ஒவ்வொண்க்குடும் ஒவ்வொரு வெளியீட்டு விழா வைச் சால் என்னெண்டு ஆக்கள் போவினம்? அதால இப்ப எழுத்தாளர்மாரைக் கண்டாலே வெளியீட்டு விழா வுக்கு அழைப்பிதழ் கொண்டு வருகினம் எண்டு தெறிச்சு ஓடுற ஆக்களும் இருக்கினம். அதால இப்ப புத்தக வெளியீடு எண்டாலே பத்துப் பதினைஞ்சு பேர் வந்தாலே பெரிய சாதனை எண்டமாதிரி நிலைமை மாறிட்டுது.

இப்பிடிப்பட்ட நிலையில, எங்கட சனத்துக்கும் வாசிப்பில ஆர்வம் இருக்கு, புத்தக வெளியீட்டுக்கும் கடல் மாதிரி இப்பவும் வருவினம் எண்டதைச் செய்து காட்டியிருக்கிறார் முன்னணியின்ர பேச்சாளரும் சட்டத்தரணியுமான சுகாஷ். தமிழன் கனவு எண்ட புத்தகத்தை அவர் போன ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில உள்ள பெரிய மண்டபம் ஒண்டில வெளியிட்டவர். புத்தக வெளியீடு எண்டால் நாலைஞ்சுபேர் தானே வருவினம் எண்டு பார்த்தால், அந்த மண்டபம் நிரம்பி வழியிறளவுக்கு சனக்கூட்டம். என்னதான் அவர் ஒரு அரசியல்வாதியா இருந்தாலும், அதையும் தாண்டி அவர் தனக்கு நெருக்கமானவை, வாசிப்பில ஆர்வம் உள்ளவை, துறைசார்ந்த ஆக்கள்,மாணவர்கள் , சக சட்டத்தரணிகள் எண்டு எல்லாருக்கும் முறைப்படி அழைப்புவைச்சு இப்பிடியொரு சனத்திரளோட புத்தக வெளியீட்டைச் செய்திருக்கிறார். உண்மையிலேயே 'ஒரு புத்தக வெளியீட்டுக்கு இவ்வளவு சனமா?' எண்டு பார்க்கவே சந்தோசமா இருந்தது. அடிச்ச புத்தகங்களும் முழுக்க அண்டைக்கே முடிஞ்சிருக்கும். இப்பிடி ஒரு படைப்பாளியின்ர புத்தகம் வெளியீட்டு விழாவி லேயே முடியிறதெல்லாம் கனநாளைக்குப் பிறகு இப்ப தான் நடந்திருக்கு. ஒரு புத்தக வெளியீட்டு விழாவை எப்பிடிச்செய்யவேணும் எண்டு சாதிச்சுக் காட்டின சுகாஷுக்கு ஒரு பாராட்டு. மற்ற எழுத்தாளர்மாரும் இப்பிடி வடிவாத் திட்டமிட்டு இதைமாதிரி புத்தக வெளியீடுகளைச் செய்யலாமே?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சொற்பொழிவும் குருபூசை விழாவும்

யாழ்ப்பாணம், மே 5

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவு தெல்லிப்பழை மாவைக் கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதில் சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குருபூசை நிறைவு விழாவும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் குருபூசை விழாவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆன்மிக விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஸ்ட விரிவுரையாளர் திருவாளர் சமூகமாமணி, கலாநிதி பா.தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் குருபூசை நிகழ்வை அடுத்து சைவப் புலவர் பிரசங்கச்சக்கரவர்த்தி சி. கா. கமலநாதனின் 'ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் சமயப்பணி' எனும் பொருளில் சொற்பொழிவும், மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெறும். குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடிவினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கும் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)



# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 5


சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், திருவாசகப்பிரியன், பிரசங்க வாரிதி ச. நவநீதனின் 'அனுபவ ஞானத்திருநூல்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# 20 போத்தல் கசிப்புடன் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், மே 5

நீண்ட காலமாக சூட்சுமமான முறையில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் உள்ளிட்ட இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 20 போத்தல் கசிப்புக் கைப்பற்றப் பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நாயன்மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று யாழ். போதைத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (சு-26)



# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 5

சட்டத்தரணியும் தமிழின உணர்வாளருமான கனகரட்னம் சுகாஷ் எழுதிய தமிழன் கனவு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழிலுள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது. புத்தகத்தை கேணல் விதுஷாவின் தாயார் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பெற்றுக் கொண்டார். ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி நந்தசேகரன்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், கல்வி யியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-41-27)



# சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்ற பொதுமுகாமையாளர் பொ.செல்வராஜாவுக்கானசேவை நலன் பாராட்டு விழா நாளை புதன்கிழமை சமாத்தின் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமாசத் தலைவர் சி. சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ளநிகழ்வில்வாழ்த்துரை, பாராட்டுரைகள் என்பன இடம்பெறவுள்ளன. (எ-41-63)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்டவேண்டாம்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக் கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சட்டத்தின் ஆட்சியா ?

## பிக்குவின் அதிகாரமா?

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட தையிட்டி பவானி வீதியைத் தன்னிச்சையாக இடைமறித்து, திஸ்ஸ விகாரைக்காக எல்லை வேலி எழுப்பப்பட்டுள்ள விவகாரம், இலங்கையில் 'சட்டத்தின் ஆட்சி' எந்த நிலையில் உள்ளது என்பதற்கு ஒரு கசப்பான சான்றாக மாறியுள்ளது. மக்கள் பல தசாப்தங்களாகப் பயன்படுத்தி வந்த பொதுவீதியை ஆக்கிரமிப்பதும், அதனை அகற்றக் கோரி சட்டபூர்வமாக அறிவித்தல் வழங்கிய மக்கள் பிரதிநிதியைப் பொலிஸார் அழைத்து மிரட்டுவதும் ஒரு ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத அராஜகமாகும். வலிகாமம் வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், 1987ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆக்கிரமிக்கப்பட்ட வீதியை மீட்கத் துணிச்சலாக முற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால், அவருக்கு ஒத்துழைக்க வேண்டிய பாதுகாப்புத் தரப்பினர், விகாராதிபதிக்குச் சார்பாக நின்று கொண்டு 'இன நல்லிணக்கம்' என்ற போர்வையில் மிரட்டல் விடுப்பதுதான் இங்கு வேடிக்கையான முரண்பாடாகும்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தையோ அல்லது மறிக்கப்பட்ட பொது வீதியையோ சட்டப்படி விடுவிக்கக் கோருவது எப்படி இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும்? உண்மையில், ஒரு மதத் தலைவரோ அல்லது பாதுகாப்புத் தரப்போ சட்டத்திற்குப் புறம்பாகப் பொதுமக்களின் உரிமைகளைப் பறிக்கும்போதுதான் இனங்களுக்கிடையிலான விரிசல் ஆழமடைகிறது. பலாலி பொலிஸாரின் இத்தகைய ஒருதலைப்பட்சமான அணுகுமுறை, வடக்கு-கிழக்கில் பௌத்த விகாரைகளும் பிக்குகளும் சட்டத்திற்கு மேலானவர்களா? என்ற கேள்வியைப் பொதுமக்கள் மத்தியில் வலுவாக எழுப்பியுள்ளது. விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தராம தேரர் அந்த வீதி மற்றும் நிலப்பரப்பு தனக்குச் சொந்தமானது என்பதற்குரிய முறையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதை விடுத்து, பொலிஸார் ஊடாக மிரட்ட முற்படுவது அவர் தரப்பு நியாயமற்றது என்பதையே கோடிட்டுக் காட்டுகிறது.

தற்போது பதவியிலுள்ள 'திசைகாட்டி' அரசாங்கம், நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப்போவதாகவும், ஊழல் மற்றும் அதிகார அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவதாகவும் உறுதி அளித்து ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ளது. இத்தகையதொரு சூழலில், தையிட்டியில் ஒரு விகாராதிபதி சட்டத்தை மதிக்காமல் அடம்பிடிப்பதும், அவருக்குப் பின்புலமாகப் பொலிஸார் இயங்குவதும் புதிய அரசாங்கத்தின் நற்பெயருக்குப் பெரும் இழுக்கைத் தேடித்தரும். தென்னிலங்கையில் ஒரு விதியும், வடக்கு-கிழக்கில் பிக்குகளுக்குச் சார்பான இன்னொரு விதியும் அமுலில் இருப்பதை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. தவிசாளர் சுகிர்தனின் துணிச்சலான முடிவு என்பது தனிநபர் சார்ந்ததல்ல, அது ஒரு சிவில் நிர்வாகத்தின் அதிகாரத்தைப் பாதுகாக்கும் போராட்டமாகும்.

நீதிமன்ற விசாரணைகளைச் சந்திக்கத் தயார் என்று தவிசாளர் விடுத்துள்ள சவால், சட்டத்தின் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையைப் பறைசாற்றுகிறது. வீதியை விடுவிப்பதன் மூலம் கணிசமான மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்ற நிலை இருக்கும் போது, அதனைத் தடுப்பது என்பது மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் செயலாகும். எனவே, அரசாங்கம் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, பொலிஸாரின் ஒருதலைப்பட்சமான போக்கைக் கண்டிப்பதோடு, பிரதேசசபையின் சட்டபூர்வமான கடமைக்குத் தடையாக இருக்கும் எல்லைகளை அகற்ற முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சட்டத்தின் முன்னால் காவியும் சீருடையும் சமமே என்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே, இந்தத் தேசத்தில் உண்மையான நல்லிணக்கம் பிறக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






### பொய்யாமொழி

**உதவி வரைத்தன்று உதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து**

**பொருள்:** கைம்மாறாகச் செய்யும் உதவி முன்செய்த உதவியின் அளவை உடையது அன்று; உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.




# துரித உணவுப் பழக்கத்தால் ஊட்டச்சத்துக் குறைபாடு



## முறைப்படுத்துவதற்கு ஆய்வு

கொழும்பு, மே.5

**ஆரோக்கியத்துக்குத் தீங்கான துரித உணவுகளை முழுமையாகத் தடைசெய்வது அல்லது முறைப்படுத்துவது தொடர்பான சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வானிலை மற்றும் பாரம்பரிய விவசாய முறைகள் காரணமாக, இயற்கையான சத்துமிக்க உணவுகள் கிடைக்கப்பெற்றாலும், ஆரோக்கியமற்ற அல்லது குறைந்த சத்துடைய உணவுகளின் நுகர்வு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. சிறுவர்கள் துரித உணவுகளுக்கு அடிமையாகியுள்ளனர்.

அதேநேரம் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களும் ஆரோக்கிய உணவைத் தவிர்ப்பதுடன், ஊட்டச்சத்து இல்லாத அல்லது மிகக் குறைந்த ஊட்டச்சத்துள்ள துரித உணவுகளையே தேர்ந்தெடுக்கின்றனர். அதனால் இவற்றுக்குத் தடை விதிப்பது அவசியம். எனினும் அதை நடைமுறைப்படுத்துவது மிகவும் சிக்கலானது. எனவே துரித உணவுகளைத் தடைசெய்வது அல்லது முறைப்படுத்துவது தொடர்பாக அமைச்சு ஆராய்ந்து வருகின்றது. வயம்ப பல்கலைக் கழகத்தின் ஊட்டச்சத்துப் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ரேணுகா சில்வாவின் ஆய்வின் அடிப்படையில், இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது-என்றார். (க-இ)

## விபத்தில் மூவர் சாவு




கொழும்பு.மே.5

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் சிறுமி ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர். குடாஓயா வெஹெரயாய சிறிபுரகம வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவரும், அத்துருகிரிய கொட்டாவ வீதியின் பழைய சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர். (க-இ)

## தானசாலைகளின் பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, மே 5

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்படும் தானசாலைகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக மட்டங்களில் இந்தப்பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தானசாலைகளை நடத்துவது தொடர்பான விசேட வழிகாட்டுதல்கள் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன. (க-இ)



## 120 வெளிநாட்டவர்க்கு நாளை வரை மறியல்

கொழும்பு, மே.5


சட்டவிரோத நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்ட 120 வெளிநாட்டவர்களையும் நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் சட்டவிரோத நிதிப்பரிமாற்றங்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கைதுசெய்யப்பட்டனர். இராஜகிரிய, மெத வெலிக்கடை வீதியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் பல மாடிகளை வாடகைக்கு எடுத்து, அங்கிருந்து இந்த மோசடி வியாபாரத்தை இவர்கள் முன்னெடுத்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் சீனா, வியட்நாம், மலேசியா, மடகாஸ்கர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களிடமிருந்து ஏராளமான கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (க-இ)

நாளை
புதன்கிழமை- சித்திரை 23
06.05.2026
சுபநேரம் : 04.26 - 05.56
ராகுகாலம் : 11.56 - 01.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்த்தேசியக் கட்சிகளின் இணைவு காலத்தின் தேவை

## கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



**யாழ்ப்பாணம், மே 5**
**சவால்கள் பலவுள்ள போதிலும், பொதுப்புள்ளியில் தமிழ்த்தேசியக் கட்சிகளைச் சந்திக்க வைக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவை. இதனைத் தவிர்ப்போமானால், தமிழ்த்தேசத்தின் கொள்கை தோல்வியடையும் என்று தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

தமிழ்த்தேசியப் பேரவையின் மேதினக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய காலகட்டத்தில் தமிழ்த்தேசம் ஒரு பொதுப்புள்ளியில் சந்திக்காமல், சமகால அரசியலுக்கு முகங்கொடுப்பது மிகவும் கடினமானது. தமிழ்த்தேசியவாதத்தை வலியுறுத்துகின்ற கட்சிகள் சிதறிப் போயுள்ளதால், குறிப்பாக வாக்குகள் சிதைந்துள்ளமையால், கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு பொது நிலைப்பாட்டை எடுக்காவிடில், தமிழ்த்தேசியத்துக்கு முழுவிரோதமாக இருக்கக் கூடிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும். ஆகவே, நாங்கள் கொள்கை ரீதியாக ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வேண்டுமென்பதில் மாற்றுக்கருத்துகள் கிடையாது.

மக்களும் அரசியல் ரீதியாகத் தெளிவடைந்து, எந்தத் தீர்வு எமக்கு உண்மையிலேயே ஒரு தீர்வாக அமையும் என்ற விடயத்தின் பின்னால் தீவிரமாக அணிதிரள வேண்டும்-என்றார். (க-66)




# தமிழ்க்கட்சிகளின் மேதினக் கூட்டம்!

யாழ்ப்பாணம், மே 5
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம், இணுவில் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக்கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றை ஒன்றிணைத்து இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரான ப.கஜதீபன், ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்த வேந்தன், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-27)



சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடா சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சமத்துவக் கட்சியின் பூநகரி தெற்கு பிரதேச அமைப்பாளர் குபேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கட்சியினுடைய பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மு.சந்திரகுமார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், கடற்றொழில் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ். பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் இராஜதுரை, மதகுருமார்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-214,113)



வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் மேதினக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் நகர் வழியாக கலைமகள் விளையாட்டு மைதானத்தை சென்றடைந்து அங்கு பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கூட்டுறவுப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், செதிலக நாதன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பங்கேற்றனர். (ச-110)

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தினக் கூட்டம் யாழ்ப்பாணம் புதிய பேருந்துச் தரிப்பிடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முலவைச் சந்தியிலிருந்து ஆரம்பமான மேதினப் பேரணி மருத்துவமனை வீதியூடாக புதிய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து அங்கு கூட்டம் நடைபெற்றது. (ச)





# தமிழரசுக்கட்சியின் மேதினப் பேரணி

முல்லைத்தீவு, மே 5
இலங்கை தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் முல்லைத்தீவு மாங்குளம் பொதுச்சந்தை வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வின் முன்னதாக மாங்குளம் பிரதான சந்தியிலிருந்து தமிழரசுக் கட்சியின் கொடிகளை ஏந்தியவாறு பேரணியாக சந்தை வளாகத்தை வந்தடைந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜா ரவிகரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதக் கொள்கைகள் மூலம் அமைதியை எட்ட முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, மே 5**

**இலங்கையின் 30 வருடகால யுத்த அனுபவங்களையும் அதன் பாதிப்புகளையும் கருத்திற்கொண்டு, நாட்டை அமைதி நோக்கிய பாதையில் இட்டுச் செல்வதற்கு அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

வியட்நாமிய பௌத்த துறவியான பஞ்ஞாகர தேரர் தம்புள்ளையில் ஆரம்பித்து கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நிறைவு செய்த 'அமைதிக்கான நடைபயணம்' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- அமைதியை நிலைநாட்டல் என்பது சட்டத்தால் மாத்திரம் முன்னெடுக்கக்கூடிய ஒன்றல்ல. அதற்கு மதக்கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் மிகவும் அத்தியாவசியமானவை.

நீண்ட அனுபவம்: இலங்கைக்கு அமைதி குறித்து கசப்பான மற்றும் நீண்ட அனுபவம் உள்ளது. 30 வருட யுத்தமும் அதனால் ஏற்பட்ட அழிவுகளும் இன்றும் மக்கள் மனதில் வடுக்களாகக் காணப்படுகின்றன. நாட்டின் மதக் கோட்பாடுகள் மற்றும் கலாசார அம்சங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சர்வமதத் தலைவர்களுக்கு உண்டு.

அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அரசாங்கம் என்ற அடிப்படையில் தாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறோம் - என்றார். (ச-இ)

# கண் சத்திர சிகிச்சையில் வடக்கு பரிணாம வளர்ச்சி

## ஆளுநர் தெரிவிப்பு!

**கிளிநொச்சி, மே 5**

கண் சத்திரசிகிச்சைப் பிரிவில் வட மாகாணம் புதியதொரு பரிணாமத்தை எட்டியுள்ளது. இலங்கையிலேயே வட மாகாணத்தில் மட்டும் தான் கண் சத்திர சிகிச்சைக்கான காத்திருப்புப் பட்டியல் 'பூச்சிய' நிலையில் உள்ளது என்று வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டினார். வட மாகாண மக்களின் கண் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட 'கிராமிய ஒளி வாழ்வுத்திட்டத்தின்' அங்குரார்ப்பணம் மற்றும் சுகாதார அதிகாரிகளுக்கான விசேட பயிற்சிப் பட்டறை நிகழ்வுகள் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- எமது மாகாணத்தின் சிறந்த சேவையால், ஏனைய மாகாணங்களில் இருந்து கூட மக்கள் இங்கு வந்து சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு செல்கின்றனர்.

இது எமது மாகாணத்துக்குக் கிடைத்த கௌரவமாகும். இந்த மகத்தான சாதனையின் பின்னணியில் கண் சத்திர் சிகிச்சை நிபுணர் மருத்துவர் எம்.மலரவன் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாக 21 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த சுகாதாரத் துறையினரின் முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகும். அதே வேளை கிராமப்புற மக்களின் கண் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் பொருட்டு, சுகாதார உத்தியோகத்தர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறைகள் இரண்டு கட்டங்களாக நடாத்தப்பட்டுள்ளன. என்றார்.

நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சி.சேரலாதன், வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி, கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருமதி நளாயினி இன்பராஜ், மருத்துவ நிபுணர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். (க-113)




# வவு. விவசாயக் குழுக்கூட்டம் அதிகாரிகளுக்கு ஆலோசனை

வவுனியா, மே 5

வவுனியா மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டத்தின் விவசாய நிலைவரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், தற்போதைய சிறுபோக பருவத்துக்கான நெற்பயிர்ச் செய்கையின் முன்னேற்றங்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் உர விநியோகத்தை வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாக அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

நெல் தவிர்ந்த ஏனைய மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் சிறுதானியச் செய்கைகளை ஊக்குவிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. மாவட்டத்தின் விவசாய உற்பத்தியை மேம்படுத்தவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும் துறை சார்ந்த நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் பி.ஏ. சரத்சந்திர தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மேலதிக மாவட்ட செயலாளர் என். கமலதாசன், பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச-110)



சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவின், சப்பறத் திருவிழா கடந்த வியாழக்கிழமை இரவு பக்தி பூர்வமாக நடைபெற்றது. (க-66)



# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பப் பொருளாதார நிலைமை

## கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே 5

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களை வலுப்படுத்தி, அவர்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில், கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் பிராந்திய இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், இழப்பீட்டுக்கான அலுவலக உத்தியோகத்தர்கள் ,தெரிவு செய்யப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-113)

# வாகன இலக்கத்தகடு மோசடி: முன்னாள் அதிகாரி சிக்கினார்

கொழும்பு, மே 5

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் முன்னாள் பிரதி ஆணையாளர், ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். முறைப்படியாகப் பதிவு செய்யப்படாத வாகனம் ஒன்றுக்கு, சட்டவிரோதமான முறையில் இலக்கத் தகடுகளை வழங்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் தற்போது பத்தரமுல்லையில் அமைந்துள்ள சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளராகப் பணியாற்றி வருகின்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யானை தாக்கி பெண் சாவு!

மட்டக்களப்பு, மே 5 மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுரவணையடியூற்று கிராமத்தில் யானைத் தாக்குதலில் தாய் ஒருவர் கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். 54 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். நான்கு பிள்ளைகளின் தாயான இவர் தனது வீட்டு வளவுக்குள் சத்தம் வருவதைக் கேட்டு வெளியில் வந்தபோது அங்கு நுழைந்த யானை திடீரெனத் தாக்கியுள்ளது. சம்பவம் குறித்து வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 02 . 1931



இறப்பு 03 . 05 . 2026

### ஜெபரட்ணம் றிச்சேட்ஸ்
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உடுவிலை சொந்த இடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெபரட்ணம் றிச்சேட்ஸ் நேற்றுமுன்தினம் (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வனஜாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான றிச்சேட்ஸ் - விக்டோறியா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - லிடியா தம்பதியரின் அன்பு மருமகனும், வெஸ்லி றிச்சேட்ஸ் (கனடா), சிலோஜினி (கனடா), பிறின்ஸ் றிச்சேட்ஸ் (UK), கிறிஸ்ரீன் மாலினி (ஆசிரியை சென் ஜோன்ஸ் கல்லூரி), தர்ஷினி (ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜரின் (கனடா), ஜோசப் (கனடா), விமலினி (UK), ஜெயசிங்கம் (பிரதேச சபை மானிப்பாய்), காலஞ்சென்ற தேவசேனன் ஆகியோரின் மாமாவும், ஏட்றியன் - மதுஷா (கனடா), ஜெரேமியன் - ஜோபல் (கனடா), திவ்யா நிஷாந்தன் (கனடா), ஜெரோமி (UK), ஜஸ்மின் (UK), ஜெனிபர் (Bcas Campus- Jaffna), ஆன் - டிலோஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அமுதன், டேறியனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.05.2026) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு இல 40, கோயில் வீதி, ஒழுங்கை சுண்டிக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.40, கோயில் வீதி ஒழுங்கை,
சுண்டிக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்
071 856 2098

(CS61371) N-1



## கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு
## சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல்
## 2026 / 2027

கரைதுறைப்பற்று பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு சபையினது அலுவலக சட்டத்தரணியாக செயற்படுதல் மற்றும் சபைக்கு அவ்வப்போது தேவைப்படும் சட்ட ஆலோசனைகளினை எழுத்து மூலம் வழங்குவதன் பொருட்டு சபையினால் சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்:**

* முல்லைத்தீவு நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்ட விடயங்கள் தொடர்பில் தேவைப் படும் பட்சத்தில் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.
* குறைந்தது 05 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் குறைந்தது 02 வருட முன் அனுபவம் முன்னுரிமையாக கொள்ளப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் 2026.05.05ம் திகதியிலிருந்து **2026.05.18ம் திகதி வரை அலுவலக நாட்களில்** மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரை படிவக்கட்டணமாக ரூபா.1,000.00 இனை பணமாகச் செலுத்தி அதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரத்தினையும் இணைத்து 2026.05.19 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடது பக்க மூலையில் "**சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தலுக்கான விண்ணப்பம் 2026,2027**" என குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ "**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு**" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 021-2290001 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை.**

(cr.47490) (N-1)

**05.05.2026**



## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 07 . 1937



மறைவு 30 . 04 . 2026

### டேவிட் ஜேசடியான் ஆனந்தராஜா (யோகராசா)
(ஓய்வுநிலை சுகாதார உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், றக்கா ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் ஜேசடியான் ஆனந்தராஜா (யோகராசா) அவர்கள் கடந்த (30.04.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் ஜேசடியான் - றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் பிரான்சிஸ் - லூசியா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மாலினி மார்கிறட் அவர்களின் அன்புக் கணவனும், அன்ரனி மக்ஸி (லண்டன்), லூட்ஸ் தர்மினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற விக்னேஸ்வரனின் மாமனாரும், அபிலாஸ், எய்டன், அபிஸ்ரிக்கா, ரியன், அஸ்ராயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், சுகிர்தம், ரஞ்சிதம் மற்றும் அன்புராணி (கொழும்பு), இன்பராணி (கனடா), காலஞ்சென்ற புனிதராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (கனடா), மனோ (லண்டன்), மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக புனித திரேசாள் ஆலயத்தில் நாளை (06.05.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இரங்கல் திருபலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
இல. 10, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
021 222 9279, 077 753 3237

(CS/61369) J-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1933



மறைவு 03 . 05 . 2026

### வேலாயுதம் அன்னரத்தினம்

யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி கற்குழி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் அன்னரத்தினம் நேற்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை வேலாயுதத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) மனைவியும், இரத்தினவேல் (முகாமைத்துவ உதவியாளர்) சந்திரன் (டென்மார்க்), பாலச்சந்திரன் (டென்மார்க்), செல்வச்சந்திரன், சந்திரகுமாரி, சந்திரவதனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலினிதேவி (ஆசிரியை) விமலா, கண்ணகி (டென்மார்க்), சுந்தரராஜன் (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீகிருஸ்ணன் (இலங்கை), ஸ்ரீசியாமளன் (சிங்கப்பூர்), ஸ்ரீதுவாரகன் (கொழும்பு), கிருஷிகா (சிங்கப்பூர்), தாராங்கனி (கொழும்பு), கீர்த்தனா (சிங்கப்பூர்), அனோசன் (சிங்கப்பூர்), நிறோசா (லண்டன்), றேகன், சுஜீவன், பென்ஜோஜ், இராகுலன், சுஜீமீரன், சிவஜன், கோகுல், சௌமியா ஆகியோரின் பேர்த்தியும், பிருத்விகா, பவிகா, அதிகா, ஆதிகன், சாலினி, அல்டேற்றா, அனிஸா, லியானா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.05.2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இடம் பெற்று தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தபாற்கந்தோர் வீதி,
கற்குழி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
076 108 1079


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமைதியைக் குலைத்தால் பயங்கரவாதச் சட்டம் பாயும்



## அமைச்சர் நளிந்த எச்சரிக்கை

களுத்துறை, மே 5

**நாட்டின் அமைதியைக் குலைக்க முற்படும் எவருக்கும் எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட கடுமையான சட்டங்களைப் பயன்படுத்த அரசாங்கம் தயங்காது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எச்சரிக்கை விடுத்துள்ளார். களுத் துறையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மே தினப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நாட்டின் எந் தவொரு பகுதியிலும் இனரீதி யான அல்லது மதரீதியான மோதல்கள் ஏற்பட அரசாங்கம் இடமளிக்கவில்லை. இனங்க ளுக்கிடையே முறுகலை ஏற்ப டுத்த முயலும் எவருக்கும் எதிரா கப் பாரபட்சமின்றி சட்டம் அமுல் படுத்தப்படும்.

நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாது காக்கத் தேவைப்பட்டால், சர்ச் சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியாவது குற்றவாளிகள் சிறையிலடைக்கப்படுவார்கள். குற்றவாளிகளை நீண்டகாலம் தடுத்துவைத்து விசாரணை செய்ய வேண்டிய அவசியம் ஏற் பட்டால், உரிய தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பிறப்பித்து அவர்கள் உள்ளே தள்ளப்படு வார்கள். நாட்டில் அமைதி யின் மையை ஏற்படுத்த முற்படும் நபர்களுக்கு எதிராக தற்போ துள்ள அனைத்துச் சட்டஅதிகா ரங்களும் முழுமையாகப் பயன் படுத்தப்படும்.

யாராவது நாட்டில் அமைதியின் மையை ஏற்படுத்த முயன்றால், அதற்காக உள்ள சட்டங்களின் கீழ் அவர்கள் உள்ளே தள்ளப்ப டுவார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம் வேண்டுமானால் அதுவும் பயன்படுத்தப்படும். அரசாங்கத் தின் இந்த நிலைப்பாடு, நாட்டில் மீண்டும் ஒரு கலவரமோ அல் லது இனவாதச் சூழலோ ஏற்படு வதைத் தடுப்பதற்கான ஒரு முன் னெச்சரிக்கை நடவடிக்கையா கும்- என்றார். (ச-இ)

# நீதிபதிகளாக மாறுகின்ற அமைச்சர்களால் இழுக்கு

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு.மே.4

அரசாங்கத்தின் அமைச்சர்கள் நீதி மன்றத் தீர்ப்புகளை முன்கூட்டியே தீர்மானிப்பது போன்று பேசுவது, நீதித் துறையை அவமதிக்கும் செயல் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்றங்கள் தீர்ப்பளிப்பதற்கு முன் னரே அமைச்சர்கள் தீர்ப்புச் சொல்வது சட்டவிரோதமானது. இதற்காக ஜனா திபதி உட்பட அமைச்சர்கள் அனைவ ரும் நீதிபதிகள் முன்னிலையில் மண் டியிட்டு மன்னிப்புக் கோர வேண்டும். 2.5 மில்லியன் டொலர் மோசடி விவ காரத்தில் பணிநீக்கம் செய்யப்பட்ட திறைசேரியின் மேலதிக பணிப்பாளர் உயிர்மாய்ப்பு செய்துகொண்டமைக்கு அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களே காரணம். அமைச்ச ரவை எடுக்கும் முடிவுகளுக்குப் பாவம் அரச உத்தியோகத்தர்களே பலியாகி றார்கள்.

வெளிநாட்டுக் கடன்களைச் செலுத் தும் அதிகாரம் மத்திய வங்கியிடமே இருந்தது. ஆளுநர் நந்தலால் வீரசிங் கவின் அனுமதியின்றி அவுஸ்ரேலிய நிறுவனத்துக்கு 7 கட்டங்களாகப் பணம் சென்றிருக்க முடியாது.



அவரை ஏன் யாரும் விசாரிப் ப தில்லை? அரசியல் பழிவாங்கல்க ளுக்காகச் சட்டத்தைப் பயன்படுத்து வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் - என்றார். (ச-இ)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 வருடங்களுக்கு மேலாக கணக்கா ளராகக் கடமையாற்றிய செல்வராசா காண்டீபன் இடமாற்றம் பெற்றுச் செல்வதை யடுத்து, யாழ்.போதனா மருத்துவமனை நிர்வாகத் தால் பிரியாவிடை நிகழ்வு அண் மையில் நடத்தப்பட்டது. (ச-இ)



பருத்தித்துறை சத்யசாயி சேவா நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தக் குரு திக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை யிலுள்ள சத்யசாயி சேவா நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் 48 பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (எ-41-66)


## மரண அறிவித்தல்

பிறப்பு 26.03.1954 — இறப்பு 04.05.2026



### திருமதி யோகேஸ்வரன் யோகாம்பிகை

திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.72/61, திருநெல்வேலி பனிக்கர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட யோகாம்பிகை (அம்பிகா) நேற்று (04.05.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் சோதிமணியாளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகேஸ்வர னின் அன்பு மனைவியும், கௌரி, சங்கர், கேசவன், கோகுலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணேந்திரம், மயூரி, அபிசாயினி, டெசில்டா (ஜெனி) ஆகியோரின் மாமியாரும், சறோஜினிதேவி, நீலாயதாட்சி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், கதிரமலை நாதன் மற்றும் பத்மராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், குலசிங்கம் மற்றும் இந்திராணி, ராஜலட்சுமி, காலஞ்சென்றவர்களான சாந்தினி, விஜயரட்ணம், றுக்மணி (றோசி) ஆகியோரின் மைத்துனியும், மிதுர்ணா, மிதுன், நிதுர்ணா, சுகிர்தா, மதுமிதா, ஆர்யன், அபிலாசினி, டயமிதன் ஆனியோரின் அன்புப் பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2026) செவ்வாய்க் கிழமை நண்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(CS 60394) A

## மரண அறிவித்தல்

பிறப்பு 05.07.1958 — இறப்பு 04.05.2026



### தனபாலசிங்கம் செல்வராணி

இளவாலை முள்ளானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் செல்வராணி நேற்று (04.05.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு - செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், தவேந்திரராசா, சற்குணராசா, காலஞ்சென்ற அருந்தவராசா, மலர்ராணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, அன்னபூபதி, கனகம்மா, சிவயோகம், சிவசுப்பிரமணியம், கைலாயபிள்ளை, இராசலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு GPS வீதி, கல்வியங்காட்டில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 899 9149 (மதி)

(CS 31757) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆசிரியை தேவை

தரம் 6 இற்கு தனிப்பட்ட வகுப்பிற்கு முக்கியமான பாடங்களுக்கு உடுவில் பிரதேசத்தில் ஆசிரியை தேவை.

தொடர்புகளுக்கு:-
075 236 4322

(CS/31751) J-1



## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 90 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 120 ரூபாய்

077 334 1281

(CR/47483) J-1


# கொழும்பு துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்


கொழும்பு, மே. 5

இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலான 'INS SINDHUKESARI' செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்தது. கடற்படை மரபுகளின் படி நீர்மூழ்கிக் கப்பலை இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

இந்தக் கப்பலில் வந்திறங்கிய குழுவினர், இங்கு தங்கியிருக்கும் காலத்தில், இலங்கைக் கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதுடன், இலங்கையில் உள்ள பல முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கும் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 13.04.1937



உதிர்வு 04.05.2026

### ஐயாத்துரை பொன்னையா

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பொன்னையா நேற்று (04.05.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை நாகரெத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கனகசபை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சபாரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், லீலாவதி, பஞ்சரத்தினம், விஜயரத்தினம், குணரத்தினம் மற்றும் அருமைநாயகம், செல்வரத்தினம், நடராசா, சுபத்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

534, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31750) A

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திருமதி
**மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை** (சின்னம்மா)

திதி:சங்ஹடகரசதுர்த்தி

தோற்றம்–13.10.1924 மறைவு–19.04.2014



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப்போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து- நீங்கள்
விண்ணோக்கிச் சென்று
பன்னிரெண்டாண்டு சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

இல-140, பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
ம.இராஜநாயகம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 22.01.1964



இறப்பு 04.05.2026

### சத்தியசீலன் ரேவதி

அல்லாரை தெற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியசீலன் ரேவதி நேற்று (04.05.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சத்தியசீலனின் அன்பு மனைவியும், நிதுசனின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - அரியமணி தம்பதியரின் அன்பு மருமகளும், விநாயகமூர்த்தி, நாகபூரணம், காலஞ்சென்ற சண்முகமூர்த்தி மற்றும் மகேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்களாதேவி, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் அங்கயற்கண்ணி, காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் மனோகரன், அகிலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்கா எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சத்தியசீலன் - கணவர்
நிதுசன் - மகன்
தொடர்புகளுக்கு-077 388 5619

(CR 47491)A

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 30.12.1944



ஆண்டவன் அடியில் 03.05.2026

### ஆறுமுகம் இராமநாதன்

**(ஓய்வுபெற்ற நடுக்கட்டு உத்தியோகத்தர் நகரசபை, சாவகச்சேரி)**

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இராமநாதன் அவர்கள் கடந்த 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துக்குட்டி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், செல்வநிதியின் அன்புக் கணவரும், மாலதி, ஜனார்த்தனி, ராதிகா, பிரபா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்குமார், சிவரூபன், பாலமுரளி, பிரசன்னா ஆகியோரின் அன்பு மாமனாரும், கதிர், ஆரதி, அபிமா, அபிஜன், தரணியா, ஆரங்கி, ஆராதனி, விஸ்வந், சங்கீர்னா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகாம்பிகையின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (06.05.2026) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6913099

(GS 61107)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் வந்தார் ரோகித், வென்றது மும்பை!

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில், லக்னோவைத் தோற்கடித்து அபார வெற்றிபெற்றது மும்பை இந்தியன்ஸ்.
மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் பாண்டியா காயம் காரணமாக நேற்று விளையாடவில்லை. சூரியகுமார் யாதவ் அணியை வழிநடத்தினார். காயத்தால் கடந்த சில ஆட்டங்களாக விலகியிருந்த ரோகித் நேற்று அணிக் குத் திரும்பியிருந்தார்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிக்கொலஸ் பூரன் 63 ஓட்டங்களை யும், மிச்செல் மார்ஷ் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.
பதிலுக்குக் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு, அதன் ஆரம்ப வீரர்களான ரிகில்டன் மற்றும் ரோகித் சர்மா இருவருமே பிரதான காரணமாக அமைந்த னர். ரிகில்டன் 83 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 84 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)



## நாட்டின்...

வியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்க ளம் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் உள்ளதாவது:-
தற்போதுள்ள மாறுபாடான வானிலை காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதி களில் இடிமின்னல் தாக்கம் உச்சம் பெற்றுள்ளது. எனவே, அவற்றின் தாக்கம் தொடர்பில் பொதுமக்கள் மிக வும் அவதானமாக இருக்க வேண்டி யது அவசியமாகும். இடிமின்னல் தாக்கத்தின்போது பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என் றுள்ளது. (அ-ம)

## தமிழக...

ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்ற நிலையில், தேர்தல் முடிவுகள் நேற் றுக் காலையில் இருந்து அறிவிக்கப் பட்டு வருகின்றன. கணிசமான வாக் குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில், தமிழக வெற்றிக் கழகம் 109 தொகுதி களில் வெற்றிபெற்றுள்ளது. தனிப் பெரும்பான்மை அமைப்பதற்கு 118 தொகுதிகள் தேவை என்ற நிலையில், நேற்று நள்ளிரவு நிலவரத்தின்படி மேலும் தமிழக வெற்றிக் கழகம் சில தொகுதிகளைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் இருந்தன.
தனிப்பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் பிரதான கூட்டணிகளில் உள்ள சிறு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்கும் வியூகத்தை தமிழக வெற்றிக் கழகம் வகுத்து வருகின்றது. இது தொடர்பான பேச்சுவார்த்தைக ளும் தற்போது இடம்பெற்று வருகின் றன.
ஆளும்கட்சி என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் 72 தொகுதிகளையும், எதிர்க் கட்சி என்ற அந்தஸ்துடன் களமிறங் கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 53 தொகுதிகளையும் கைப் பற்றியுள்ளன.
தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், இரண்டு தொகுதிகளில் போட் டியிட்ட நிலையில், இரண்டிலும் வெற் றிபெற்றுள்ளார். அந்தக் கட்சியின் பிரதானிகளான ஆதவ் அர்ச்சுனா, ஆனந்த், செங்கோட்டையன் உள் ளிட்ட அனைவரும் வெற்றிபெற்றுள்ள னர்.
தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது சொந்தத் தொகுதியான கொளத்தூரில் தோல்வியடைந்துள்ளார். தமிழகத் தில் முதல்வர் என்ற அந்தஸ்தில் இருந்தவாறு தேர்தலை எதிர்கொண்ட ஒருவர் தோல்வியைச் சந்திப்பது இதுவே முதல்முறை. தமிழக வெற் றிக் கழகத்தின் வேட்பாளர் கொளத்தூ ரைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, கடந்தபலதசாப்தங்களாகதி.மு.க.வின் கோட்டையாக இருந்த கொளத்தூரை தி.மு.க. இழந்துள்ளது. (அ-ம)

## சீமானின்...

இருக்கும் என்றும், தமிழகத்தில் நான் குமுனைப் போட்டி நிலவும் எனவும் பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளி வந்திருந்தன. எனினும், ஒரு தொகு தியைக்கூட கைப்பற்றாமல் நாம் தமிழர் கட்சி தோல்வியடைந்துள்ளது. இறுதியாக இடம்பெற்ற சட்டப்பேர வைத் தேர்தலில் சீமான் 36 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்த நிலை யில், இம்முறை வெறும் 8 லட்சம் வாக்குகளே அவருக்குக் கிடைத்துள் ளன. (அ-ம)

## மதுப்...

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியைச் சேர்ந்த எபிசியஸ் ஜெஸ்மன் (வயது -36) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,
குருநகரில் உள்ள தேவாலயம் ஒன் றுக்கு அருகில் நண்பர்கள் இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மது அருந்தியுள்ளனர். இதன் போது இருவருக்கும் இடையில் வாக் குவாதம் ஏற்பட்ட நிலையில் திடீரென ஒருவர் மற்றையவர் மீது மதுப்போத் தலால் தலையில் பலமாகத் தாக்கி யுள்ளார். இதன்போது படுகாயம டைந்த இளைஞர் குருதி வெள்ளத் தில் மயங்கிச் சரிந்த நிலையில், அயலவர்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சந்தேகநபரை பொலி ஸார் கைது செய்துள்ளனர். விசார ணைகளுக்குப் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக் கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66-20-26)

## பூநகரி...

அந்த உழவியந்திரம் கைப்பற்றப் பட்டு பூநகரிப் பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தே கநபர் ஒருவரும் கைது செய்யப்பட் டுள்ளார்.
இது தொடர்பில் பூநகரி பிரதேசசபை யின் செயலாளரைத் தொடர்பு கொண்டு வினவியபோது அவர் தெரி வித்ததாவது:-
பூநகரி - நெற்புலவு முன்பள்ளி வீதிச் சீரமைப்புப் பணிகள் தனியாரிடம் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வழங்குவதற்காக ஜெயபுரத்தில் பிர தேசசபைக்குச் சொந்தமாக உள்ள மணல் யாட்டிலிருந்து மணலைக் கொண்டுசென்றபோதே இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது. இந்தக் காவு கைக்காக அனுமதி வழங்கப்பட்ட உழவியந்திரம் கழிவகற்றும் பணிக் குச் சென்றமையால், மற்றொரு இயந்திரம் அனுப்பி வைக்கப்பட்டது. இதன்போதே, விசேட அதிரடிப்படை யினர் அந்த உழவியந்திரத்தைக் கைப்பற்றியுள்ளனர் - என்றார். (அ-ம-113-214)

## கணவனைப்...

செய்துள்ளனர். மன்னார் - வங் காலை பகுதியைச் சேர்ந்த 36 வயது டைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
மன்னார் மூர்வீதியில் வாடகை வீடு ஒன்றில் வசித்து வந்த கணவனுக் கும், மனைவிக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை இரவு வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே, அந் தப் பெண் தனது கணவனைப் படு கொலை செய்துள்ளார். இதைய டுத்து, சடலத்தைத் துண்டு துண்டு களாக வெட்டி உரைப்பையிலிட்டு மலக்குழிக்குள் போட்டுள்ளார். மன் னார் பொலிஸ் நிலையத்தில் சரண டைந்த அந்தப் பெண், இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரிடம் கூறிய நிலையில், பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.
உடனடியாகச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தைப் பார் வையிட்டதுடன், நீதிமன்றின் அனும தியைப் பெற்று சடலத்தை மீட்டனர். மன்னார் மாவட்ட மருத்துவமனை யில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213-56)

## மரக்...

சாவகச்சேரி போதைப்பொருள் குற் றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவ டிக்கையின்போதே, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள் ளது. சந்தேகநபரிடம் இருந்து 10 லட் சம் ரூபா பெறுமதியான 43 முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ள நிலை யில் அது தொடர்பில் பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-28)

## செம்மணி...

றன. இதன்போதே, நான்கு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட் டுள்ளன. இதேவேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட நான்கு என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட் டன. இதன்படி, செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 250 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் 247 மனித என்புத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
பேராசிரியர் ராஜ் சோமதேவ தலை மையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற னர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்கா ணித்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையி லான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு



கிளிநொச்சி, மே 5

மக்கள் வங்கி கிளிநொச்சிக் கிளையினரின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலய வளாகத்தில் நடைபெற்றது.

கணிதப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற தெய்வேந்திரன் திருக்குமரனுக்கு 150,000 ரூபா பெறுமதியான காசோலையும், விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற ஆனந் கிருசோத் மற்றும் வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற கமலநாதன் மதுமினி ஆகியோருக்குத் தலா 20,000 ரூபா பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வன்னிப் பிராந்திய மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் கமலநாதன் பிரதீப், கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர், வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர், பாடசாலையின் அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-41)



வட்டுக்கோட்டை 50ஆவது எழுச்சி மாநாடு தொடர்பான மாவட்ட மட்ட விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம் பெற்றது. (எ-41-20)


## காணி விற்பனைக்கு


உரும்பிராயில் 20 பரப்புக்காணி சுற்றி மதில் 100 அடி, 40 அகலம் கொண்ட பண்ணை, 2 அறைகள் கொண்ட வீடு, நன்னீர் கிணறு கொண்ட தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

077 286 5335, 077 034 4552

கரந்தன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

CS(31749) J-1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 13 நாள்கள் காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் நடைபெறவுள்ளது. (எ-66)


## பாதுகாப்பு உத்தியோகத்தர்

# தேவை




எங்களது முன்னணி நிறுவனத்தில் இணைந்து பணியாற்ற, சுறுசுறுப்பும் அர்ப்பணிப்பும் மிக்க பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Security Officers) உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.

- வயதெல்லை:
  19 - 50 வயதிற்குட்பட்டவர்கள்
- கவர்ச்சிகரமான சம்பளம்:
  நாளொன்றுக்கு 1500/- தொடக்கம் 2000/- ரூபா வரை
  (அனுபவம், கல்வித்தகைமை என்பவற்றுக்கமைய தீர்மானிக்கப்படும்)



ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

077 115 4843

ஜவ்னா றன்னர்ஸ் அமைப்பினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்ணை முதல் மண்டைதீவுச் சந்தி வரையான இரண்டு கிலோமீற்றர் கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கடற்கரை மற்றும் வீதிப் பகுதிகளில் நீண்டகாலமாகத் தேங்கிக் கிடந்த பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகள் அகற்றப்பட்டன. (எ-41-66)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் 11 நிலபரப்பு காணி விற்பனைக்கு

- 16 அடி பதையுடன் ஒரு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சாவகச்சேரி நகரத்தில் இருந்து 1 1/2km தூரத்தில்
- A-9 வீதியில் இருந்து 300 m தூரம் சிவபூமி பாடசாலை 200 m தூரம்
- சாவகச்சேரி வேலாயுதம் வீதியில் (சிவபூ பாடசாலை வீதி)
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி, நன்னீர் ஊற்று நிலம்
- நகர சபை சிறுவர் விளையாட்டு பூங்கா 400 m தூரத்தில்
- ஒரு பரப்பின் விலை முன் பகுதிகள் 1500000/= பதினைந்து இலட்சம் ரூபாய் முதல் 1300000/= பதின்மூன்று இலட்சம் வரை
- பார்வையிடும் நேரம்: காலை 9.00 தொடக்கம் மாலை 6 வரை

தொடர்பு:- 0772880152 0767390413

(CS 31753) A


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம் advt@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.